# ஸ்ரீ வைசாக மாஹாத்மியம்



ஸாஹித்ய வாங்முகபூஷண
புராண ஸாகர
ஸ்ரீவத்ஸ. ஸோமதேவ சர்மா
அவர்கள் எழுதியது.

★

கிடைக்குமிடம்:
வைதீக தர்ம வர்திநீ புக் டிபோ
கடவாசல் போஸ்ட் (Via) சிய்யாழி
குருகுலம்
2, ஸ்டேஷன் ரோடு, சென்னை-33.

விஸ்வாவசு—ஐப்பசி

[விலை 0-37 பை.

ஸ்ரீ ராமஜயம்
வைகாசி ஸ்ரீ 26உ
அருணா

உ

ஸ்ரீ கிருஷ்ணயநம:

# ஸ்ரீ வைசாக மாஹாத்ம்யம்

ஸ்ரீ வேதவ்யாஸ பகவானுல் வகுக்கப்பட்ட பதினெண் புராணங்களில் மிகப் பெரியதான ஸ்ரீ ஸ்காந்த புராணத்தில் ஸ்ரீ வைஷ்ணவ கண்டத்தில் ஏழாவது கண்டமான வைசாக மாஹாத்ம்யம் இருப்பத்தைந்து அத்யாயங்கள் கொண்டது.

ஒரு ஸமயம் தனது நாட்டை நாடிவந்த நாரதரை வரவேற்று வந்தநமளித்து ஆஸநத்தே அமர்த்தி அம்பரீஷ மகாராஜன், "ஸகல மாதங்களிலும் வைசாகம் மிகச் சிறந்தது. மாதவனுக்கு மிகப்பிரியமானது என்று கூறுகிருர்களே? அம்மாதத்தில் எப்படி ஸ்நாநம் செய்வது? எப்படி அச்யுதனை அர்ச்சிப்பது? ஏன் அவருக்கு அது அதிகப் பிரியமானது?" என்று கேட்டான். நாரதர் மஹாவிஷ்ணு ஸ்ரீ லக்ஷ்மீதேவிக்குக் கூறியபடி தன் பிதாவான பிரும்மா தனக்குச் சொன்னவண்ணம் அதைக் கூறினுர். வித்யைகளில் வேதம். மந்த்ரங்களில் பிரணவம், மரங்களில் கல்ப விருக்ஷம், பசுக்களில் காமதேனு, தேவரில் விஷ்ணு, வர்ணங்களில் அந்தணன், நதியில் கங்கை, ரத்னங்களில் கௌஸ்துபம் போல் மாதங்களில் சிறந்தது வைசாகமாம். அம்மாதத்தில் மானிடருக்கு நன்மை புரியக் கருதி பகவான் கட்டளையிட, தீர்த்த தேவதைகள் ஸூர்யோதயம் முதல் ஆறு நாழிவரை தீர்த்தங்களில் வஸிக்கின்றனர். அச்சமயம் விதிவழுவாது முழுகுவோரது பாபத்தை அகற்றி வேண்டிய வரமளிக்கின்றனர். ஸ்நாநம் செய்யாதவரைச் சபிக்கின்றனர்.

வைசாகத்தில் செய்யும் ஸகல தாநங்களும் அக்ஷய்யமான பலனை அளிக்கும். விசேஷமான அவச்யம் செய்தே தீரவேண்டிய சில தாநங்களுள், தீர்த்த தாநம் மிகச்சிறந்

தது. தண்ணீர்ப் பந்தல் வைப்போர் தனது குலத்துடன் பல்லாயிரமாண்டு வைகுண்டத்தில் வஸிப்பர். குடை விசிறி, உதகும்பம், இவைகளும் தானத்திற்கு மிகச் சிறந்தவை. ஜலதானம் செய்யாதவர், கழுத்தில் ஓர் த்வாரமிருப்பதால் குனிந்து தீர்த்தமருந்த முடியாமல் மழை பிந்துக்களை எதிர்பார்த்து நிற்கும், சாதக பக்ஷியாகப் பிறப்பர். விசிறி அளிக்காதவர் வாதரோகத்தால் பீடிக்கப்படுவர். ஸகல துக்கங்களையும் அகற்றவல்ல குடை தானம் செய்யாதவர் பேயாக பிறப்பர். பாதுகை, அநாதைகள் நிழலில் நிற்க மண்டபம், அன்னம், படுக்கை, பாய், தலையணி, கம்பளம், வஸ்த்ரம், குங்குமம், சந்தநம், கோரோசனை, மாம்பழம், தாம்பூலம் முதலிய தாநங்கள் வைசாகத்தில் செய்யத்தக்கன. அன்ன தாதா பிதா ஆவான். படுக்கை தாநம் நோயை அகற்றும், தலையணி தாநம் ஏழு ஜன்மத்தில் செய்த பாபத்தை நீக்கும். கம்பளம் அபமிருத்யுவை அகற்றும். குங்கும பஷபங்கள் ராஜ பதவியைத் தரும். சந்தநம் எலும்பு சதைகளிலுள்ள பாபத்தைப் போக்கும். நீர்மோர் செல்வத்தை அளிக்கும். தண்டுலம் ஆயுளைப் பெருக்கும். வெள்ளரிக்காய் கரும்பு பாநகம் இவை கோரிய பலனைத் தரும். பாநக தாநத்தால் பித்ருக்கள் ஸந்தோஷமடைகின்றனர். நூறு கயா ச்ராத்தத்திற்கு ஸமம் பாநக தாநகமாகும்.

ஸத்கதை, தீர்த்தயாத்ரை, ஸத்ஸங்கம், அன்ன தாநம், அரசமரம் வளர்த்தல், ஸத்புத்ரன் இவைகளில் ஒன்றேனுமில்லாதவர்கள் நற்கதிபெறுர். வைசாக ஸ்நாநம் செய்வோர், எண்ணெ, பகல் தூக்கம், கட்டில், நிஷித்த பக்ஷணம், வீட்டில் ஸ்நாநம், இரவு போஜநம், இருமுறை போஜநம் இவைகளை விலக்கவேண்டும். வைசாக ஸ்நாநம் செய்யாதவர் கழுதையாகவும், சண்டாளனுகவும், நாயாகவும், பேயாகவும் பிறப்பர். ஸ்நாநம் செய்தும் தாநம் செய்யாதவர் தரித்ரனுக ஜநிப்பர். வைசாக விருதத்தை விட்டு மற்றெதைச் செய்தாலும் உப்பில்லாத பாகம்போல் பயனற்றதாம். வைசாக ஸ்நாந

மும் வைகுண்டநாதன் பூஜையுமில்லாதவர் பன்றியாகப் பிறப்பர்.

உலகைப்படைத்த பகவான் எல்லோருக்கும் எல்லா கார்யங்களுக்கும் அநுகூலமாகவஸந்தருதுவைப்படைத்து அக்காலத்திலே ரமாதேவியுடன் ஸகல தேவகணங்களும் சூழ பாரினில் ஒவ்வோர் வீட்டிற்கும் வருகிறார். அச் சமயம் ஸ்நாந தாநம் செய்யாதவரது செல்வத்தை அப ஹரிக்கிறார். வைசாகத்தில் பரம ஸுலபமான ஜல தாநத்தையேனும் செய்யவேண்டும். இல்லையேல் உத்தம மானிட ஜன்மாவை இழந்து பசுபக்ஷி புழுக்களாக பிறப்பர்.

இக்ஷ்வாகு வம்சத்தில் ஹேமாங்கன் என்றோரரச னிருந்தான். அவன் செய்யாத தாநமில்லை. ஆனால் எளி தில் எங்கும் கிடைக்கும் என்று ஜலதாநம் மட்டிலும் செய்யவில்லை. ஏழை, கூன், குருடு, நொண்டி முதலியோ ருக்கே விசேஷமாக தாநம் செய்வான். ஜல தாநம் செய் யாத குற்றத்தால் மூன்று பிறவி சாதகமாகவும் ஓர் பிறவி கழுகாகவும் ஏழு பிறவி நாயாகவும் பிறந்து கடைசியாக பல்லியாக பிறந்து மிதிலா நகரில் ச்ருதகீர்த்தி எனும் அரசன் அரண்மனையில் தங்கியிருந்தான். தற்செயலாக ஆங்கு ச்ருததேவர் எனும் பெரியார் வர மன்னன் மது பார்க்க பூஜைசெய்து, அவர் திருவடி ஜலத்தைத் தன் சிரஸின்மீது ப்ரோக்ஷித்துக் கொண்டார். அந்த ஜலம் இந்த பல்லிமீதுபட அதற்கு பூர்வ க்ஞானம் உண்டாகி "என்னைக்காத்தருளும்" என்று கதறிற்று. முனிவர் நீ யார்? ஏன் இவ்வுடலெடுத்தாய்? என்று வினவ, பல்லி "வஸிஷ்ட சிஷ்யனான இக்ஷ்வாகு குமரன் ஹேமாங்கன் யான். எவ்வளவு நக்ஷத்ரங்கள் உள்ளனவோ அவ்வளவு கோதாநம் செய்தவன். ஆனால் பல பாப ஜன்மங்களை எடுத்து இப்போது இந்த உடலிலிருக்கிறேன். தாங்கள் தான் இதற்குக் காரணம்கூறி எனக்கு நற்கதி அளிக்க வேண்டும்" என்றது. மஹர்ஷி ஞானக் கண்ணாலறிந்து, "உனக்கு குரு பல முறை கூறியும் நீ அலக்ஷ்யமாக ஜல தாநம்செய்யவில்லை. அன்றியும் தாநங்களை ஸத்பாத்

திரத்திலளிக்க வேண்டும். அதைவிட்டு நீ அங்க ஹீநருக் களித்தாய். அது கருணையாலளிக்கும் உதவியே தவிர தாநமாகாது'' என்றுரைத்து தான் செய்த தீர்த்த தாந பலத்தை அதற்களித்தார். அப்பல்லி உடலைவிட்டு ஹேமாங்கன் ககுத்ஸ்த புத்ரனுக ஜனித்தான். இதைக் கண்டு வியந்த ச்ருதகீர்த்தி தர்ம ஸூக்ஷமத்தைக் கூறும் படி கேட்க ச்ருததேவர் கூறுகிறுர்.

இம்மாதத்தில் மாம்பழம் தத்யந்நம் இவைகளை அனிப்பதும் ஸாதுகளுக்கு விசிறுவதும் உத்தமம். மஹா விஷ்ணு பூஜையால் மக்களைப் பெறலாம். இங்ஙனம் செய்யாதவர் பேயாகவும் ராக்ஷஸராகவும் பிறப்பர். ரேவா தீரத்தில் தீர்த்த யாத்ரை ரிமித்தம் செல்லும்போது என்னை ஓர் பேய் அடித்துத் தின்னவந்தது. ஆனுல் எனதருகே வரமுடியாமல் தூரே நின்று அட்டஹாஸம் செய்தது, நீ யார்? என்று நான் கேட்க, ஆநர்த்த தேசத்திலே பூவர புரத்திலே ஸாங்கிருதி கோத்திரத்திலே யான் பிறந்தவன், மைத்ரன் என்பது எனது பெயர். ஸகலதாந தர்மங்களையும் செய்தேன். அன்னதாநம் மட்டிலும் செய்தேனில்லை. ஆதலின் பசிதாஹத்தினுல் வாடிப்போய் திரிகிறேன். எனது புதல்வன் ச்ருத தேவனைக் கண்டு வைசாக அன்னதாநத்தினுல் எனது துயரைத் தீர்க்கும்படி கூறுமென்றது. இதைக் கேட்ட யான் நானே உமது புத்ரன். விரைவில் தங்கள் துன்பத்தை அகற்றுகின்றேனென்று விடைபெற்று விதிப்படி வைசாக ஸ்நாந தாநாதிகளால் தந்தையை வைகுண்ட மனுப்பினேன்.

மானிடர் இம்மை ஸுகம்பெற பரமன், ஜலம் அன்னம், ஒளஷதம், இம்மூன்றையும், மறுமை ஸுகத்திற்கு ஸத்ஸேவை விஷ்ணுஸேவை தர்ம ஸேவை இம்மூன்றை யும் முக்ய ஸாதனங்களாக அமைத்தார். இதில் ஸத் ஸேவாதிகளை விட்ட தக்ஷன் சரிதத்தைகேள். தக்ஷன் ஓர் வேள்வி செய்யக் கருதி அதற்கு தாக்ஷாயணி எனும் தன் மகளையும் மாதேவனையுமழைக்க கைலாஸஞ்சென்றுர்.

தக்ஷனைக்கண்டு பரமசிவன் எழுந்திருக்கவில்லை. சினங் கொண்ட தக்ஷர் குருவுக்கெழுந்திரா சீடன். பதிக்கெழாத மனைவி, பெரியாருக்கெழா சிறுவன் ஆயுள் பலம் கீர்த்தி முதலியவைகளை இழப்பானன்றோ? என்றார். மஹேசன் புன்னகையுடன் "ஆதலால் தான் சிஷ்யனான உனக்கு நான் எழவில்லை" என்றார். இன்னும் அதிகம் க்ரோதங் கொண்டு தக்ஷன் சிவநிந்தைசெய்து அவரை அகற்றி வேள்வியை ஆரம்பித்தான். இதை உணர்ந்த விஷ்ணுவும் பிரம்மனுமங்கு செல்ல மறுத்தனர். தக்ஷகுமாரி தன் பதியைப் பழித்த பரதகனது பாபத்தைப் போக்க யாகசாலைக்குச் சென்றாள். தக்ஷனுக்கு பயந்து தாயும் தன்னை வாவென அழைக்காததினால் தக்ஷனுக்குச் சில புத்திமதிகூறி ஸதீ யாகதீயில் உடலைவிட்டாள், சிவனது ஜடையிலிருந்து தோன்றிய வீரபத்ரன் தக்ஷனது அத்வரத்தை அழித்தான். மந்த்ர பலத்தால், சேனைகள் அறுக்கமுடியாதிருந்த தக்ஷன் தலையைத் தானே அறுத்து அக்னியில் ஆஹுதி செய்தார், தேவர்கள் பலபல அங்கங்களை இழந்தனர். பிரம்மனது பிரார்த்தனைக்கிணங்க பரமசிவன் தக்ஷன் தலையையும் தேவரிழந்த அவயவங்களையும் தந்தருளினார். தர்ம ஸேவையை இழந்ததால் தனக்குண்டான துன்பத்தை உணர்ந்த தக்ஷன் தருமத்தில் பேரவா கொண்டான்.

தாக்ஷாயணி தன்னை நாடித் தவம்செய்த இமயவன் கன்யகையாகத் தோன்றினாள். சிவன் தவக்கோலத்துடன் ஆலமரத்தடியே தக்ஷிணாமூர்த்தியாக அமர்ந்தார். அம்பிகை கன்யகையாக ஓரிடத்திலே, ஐயன் துறவியாக மற்றோரிடத்திலே என்றால் உலகிற்கேது இன்பம்? சிவனும் சக்தியும் சேர்ந்தாலன்றோ சாந்தியும் இன்பமும் உலகிலே நிலவும்! தாரகனெனுமரக்கன் தேவரைத் தாக்கினான், முனிவரை மிரட்டினான், எளியோரை உண்டு ஏப்பம் விட்டான். அறத்தை அழித்தான். அமரர், யக்ஞ யாகாதிகளில்லாது உணவையுமிழந்து அரக்கனிடம் அடியும்பட்டு சொல்லொணாத் துன்பமடைந்தனர். தார

கனே சிவன் ஸன்யாஸியாயிருப்பதால், அவரிடம் பிறக்கும் குழந்தையைத் தவிற மற்ரோரால் மரணமில்லை என வரம்பெற்ருன். வானவர் பிரம்மனைவேண்ட அவர் சிவனருளைப்பெற்று பார்வதீ விவாஹத்திற்கு ஏற்பாடு செய்யும்படி கூறினர். இந்திரனுணைப்படி மன்மதன் ருத்ரன்மீது பாணமெய்து அநலக் கண்ணுல் சாம்பலாயினன். ரதி உடன்கட்டை ஏற அசரீரி அவளைத்தடுத்து விரைவில் உன் பதி கண்ணன் குமரனுக ஜநிப்பான். ஆனுல் சிவாபசாரம் செய்ததால் பிறந்தவுடன் காணுமற்போவான் என்றது.

அதைக்கேட்டு ரதி சிறிது ஆச்வாஸமடைந்தாள். அமரர் அவளை அணுகி, முன் கல்பத்தில் உனது புருஷன் ஸுந்தரன் என்ற அரசன். அச்சமயம் நீ ருதுவாயிருந்து தீட்டை வீட்டில் கலந்தாய். அந்த தோஷத்தினுல் பதியை இழக்கநேர்ந்தது. நீ அதற்கு ப்ராயச்சித்தமாக வைசாக விருதம் செய். உன் கணவனதைச் செய்யாததாலும் உனது தோஷத்தாலுமே அங்கத்தை இழந்தான் என்றனர். அங்ஙனமே அவள் வைசாக விருதத்தைச் செய்து வந்தாள்.

பர்வதராஜ குமாரி தவஞ்செய்து பரமசிவத்தைப் பதியாகப் பெற்ருள். ஆதி தம்பதிகள் இருவரும் கூடிக் குலவி இல்லற இன்பத்திலீடுபட்டனர். ப்ரதி திநம் அவர்களது சேர்க்கையால் கரு தரிக்காமலிருந்தது. தாரகன் மாண்டபிறகே இந்திரன் தனது ஹத்தி தோஷத்தை ஏற்ற பெண்மக்களுக்கு, கர்ப்பிணி கணவனுடன் சேர்ந்தால் கருவிற்கு நாசமில்லை என வரந் தந்தார். தேவி தனது தேவனுடனிருந்தபோது கர்ப்பமாகாமலே இருந்தது. இவர்களிடம் பிறந்த குழந்தையல்லவா சூரனை வெல்பவன்! தேவர் ஒன்று கூடி யோசித்து அக்நிபகவானை அவர்களிடமனுப்பினர், உமயவள் அன்ய புருஷனைக் கண்டதும் அகல, சிவவீர்யம் கீழே சிந்திற்று. அதை அக்நியே சுமக்கும்படி தேவதேவனுணையிட, பத்துமாதம் சுமந்து சுமக்கமுடியாத

காலத்தே தேவர்கூறிய மந்திரத்தால் கருவை கனல் தேவர் கங்கையிலே விட்டார். சரவணப் பொய்கையில் ஆறு குழந்தைகள் தோன்ற பிரம்மன் உத்திரவுபடி கிருத்திகைகள் பால் கொடுக்க எடுத்தனர். அச்சமயம் ஓர் உடலும் ஆறுமுகமுமாக மாறினுன் குமரன். அச்சரவண பவனே அன்னே பார்வதி கைலயங்கிரிக்கு அழைத்துச் சென்ருள்,

ச்ராவண சுக்ல த்விதீயையில் ஆரம்பித்து ரதிதேவி அசூன்யசயந விருதமும் செய்தாள். ஆவணி முதல் நான்கு மாதம் லக்ஷ்மீ ஸமேதனுகவும், மார்கழி முதல் நாலு மாதம் ருக்மிணியுடனும் சித்திரை முதல் நான்கு மாதம் பூதேவியுடனும் நியமத்தோடு மாதவனேப் பூஜித்து முடிவில் பனிரண்டு கலச ப்ரதிமாதிகளேக் கொண்டு உத்யாபநம் செய்து முடித்தாள். கணவனும் எழுந்துவந்தான்.

வைசாகத்தில் குடை தாநத்தால் மேன்மையுற்ற மன்னன் கதையைக்கேள் ! வங்க தேசத்தில் குசகேதுவின் புத்ரன் ஹேமகாந்தனென்ருேரரசனிருந்தான். அவன் வநஞ்சென்று வேட்டையாடிக் களைத்துப் பசி தாஹம் மேலிட்டு முனிவர் ஆச்ரமஞ்சென்ருன். மஹரிஷிகள் நிஷ்டையிலிருந்ததால் மன்னனின் விருப்பைப் பூர்த்தி செய்ய வில்லே. பசியால் கோபங்கொண்டு தபஸிகளேச் சிக்ஷிக்க ஆரம்பித்தான். சீடர்கள் ஓடிவந்து குருவைக் காக்கமுயன்றனர். அரசன் பொல்லாக் கோபத்திற்காளாகி முன்னூறு சீடரைக்கொன்று ஊருக்குத் திரும்பினுன். இதையறிந்த அவரது தந்தை அம்மஹாபாதகி தன்னுட்டிலே காலடி வைக்கக்கூடாதென காட்டிற்கே விறட்டினுன். இருபத்தெட்டாண்டுகள் வநவாசஞ்செய்தான். ஆங்கு அவனே முன்னூறு பிரும்மஹத்திகளும் சூழ்ந்து பலவகையாக பீடித்துக்கொண்டிருந்தன. ஓர் வைசாக மாதத்தில் திருதர் எனும் ரிஷி தீர்த்த யாத்திரைக்குச்சென்று வழியறியாது வநத்தில் சிக்கி வெய்யிலால் வாடி மூர்ச்சையாக விழுந்து கிடந்தார். அவரைக் கண்டவுடன் ஹேமகாந்தன் இறக்கங்கொண்டு சிறிது ஜலமளித்து இலேகளாலா

கிய ஓர் குடையையுமளித்தான். அவர் அயலூர் சென்ருர். ஹேமகாந்தனுக்கு கடைசி காலம் வந்தது. மூன்று யமகிங்கரர் தன்னைக் கட்டிச்செல்ல வந்திருந்ததைக் கண்டான். அவர்களைக்கண்டு அஞ்சி அழவேண்டிய காலத்திலே குடை ஜலம் தந்த புண்யத்தால் விஷ்ணுஸ்மரணமுண்டாயிற்று. அந்த்ய காலத்தில் அச்யுதனை நினைப்போருக்கு ஆபத்து வருமோ? ஹரியின் ஆணைப்படி விஷ்வக்ஸேநர் யமதூதரை விரட்டி அருக்கு நீண்ட ஆயுளைத் தந்து தானே அவர் தந்தையிடமிவரை அழைத்துச் சென்று ரஜ்ய பட்டாபிஷேகம் செய்வித்தார்.

இவ்வளவு ஸு(சு)லபமாகவும் சிறந்ததாகவுமுள்ள வைசாக விருதத்தை ஏன் எல்லோரு மனுஷ்டித்து நன்மை பெறவில்லை என்று அரசன் கேட்க, ச்ருத தேவர் கூறினர். முன்னர் காசியில் இக்ஷ்வாகு வம்சத்தில் ந்ருக புத்ரனன கீர்த்திமான் என்ருேர் ராஜனிருந்தான். அவன் வேட்டையாட வநஞ்சென்று ரிஷி குமாரர்கள் கிணறு, குளம் வெட்டுவதையும், தண்ணீர்ப் பந்தல் நடத்துவதையும் விசிறுவதையும், நிழலுக்காக வழியில் மண்டபம் அமைப்பதையும், கரும்பு சந்தநம் தாம்பூலம் பழம் பாநகம் குடை முதலியவைகளை அளிப்பதையும் மரத்தின்கீழ் பெறுக்கி ஜலந் தெளிப்பதையும் கண்டு நீங்கள் யார்? எதற்காக இதைச் செய்கிறீர்கள்? இதன் பயனென்ன? என வினவினர். அவர்கள், நாங்கள் வஸிஷ்ட சீடர்கள், குருவின் உத்திரவுப்படி இதைச் செய்கிருேம். இதன் பயனைக் கேட்க அவகாசமுமில்லை, எண்ணமுமில்லை என்று அவஸர அவஸரமாகக் கூறிவிட்டு தனது வேலையிலீடுபட்டனர். பார்த்திவன வஸிஷ்டரைத் தேடி வணங்கி இதையே வினவினன். அவர் வைசாக பெருமையைக்கூறி அச்சமயம் செய்யும் சிறிய புண்யமும் பெரிய பலனை அளிக்கும். ஆதலின் நீயும் உனது குடிகளும் இதைச்செய்து நன்மை பெறுங்களென்ருர். அரசன் அங்ஙனமே, எட்டு வயதிற்கு மேற்பட்டு எண்பது வயதிற்குட்பட்டவர் அனைவரும் வைசாக விருதமனுஷ்டிக்க வேண்டும். இல்லையேல் கடு

மையாக சிக்ஷை அடைவர் என்ற பறை சாற்றி எல்லோரு மனுஷ்டிக்கும்படி செய்தார். அதனுல் அகாலமரணம் அகன்றது. நகரத்திலுள்ளோர் ஸ்வர்க்கஞ் சென்றனர். யமதர்ம ராஜன் வேலையில்லாமல் உத்தியோகம் செய்வது பாபமெனக் கருதி கீர்த்திமானுடன் போருக்குச் சென்ருர். பகவான் மன்னனைக் காக்க சக்ரத்தை ஏவினுர். அது யமனைத் துறத்த அவர் எங்கும் சரணமின்றி கதற, கீர்த்திமான் அதையே துதித்து யமனுக்குண்டான ஆபத்தை அகற்றினுர். யமதர்மன் பிரம்மனிடஞ்சென்று, வேலையின்றி ஊதியம் பெறுவோர் பூனையாகப் பிறப்பர். கீர்த்திமானது செய்கையால் இச்சமயம் வைசாகமனுஷ்டிப்பவரின் இருபத்தோரு தலைமுறை நகரத்திலிருந்தோர் ஸ்வர்க்கஞ் சென்றனர். எனது சித்ரபடத்தில் எழுத ஒன்றுமில்லாது சூன்யமாக இருக்கிறது. பழையதுமழிந்தது என்று முறையிட்டான்.

பிரும்மா, தாஸர்கள், தங்களால் முடியாத கார்யத்திற்காக சிக்ஷிக்கப்பட்டார். சக்தியிருந்தும் செய்யாமலிருப்பதே குற்றம். ஹரிபக்தனைக் கெடுப்பது முடியாது, நல்லதல்ல, நீயும் வா, விஷ்னுவிடம் செல்வோமென்று யமனுடன் வைகுண்டஞ்சென்ருர், தன் திருவடியைப் பணிந்து போற்றுமவர்களைப் பார்த்து பகவான் உங்களது உள்ளத்தை உணர்வேன். அவச்யமானுல் நான் கருடனையும் ஏனைய எனது சின்னங்களையும் வைக்குண்டத்தையும் லக்ஷ்மியையுங்கூட விடுவேன். என் பக்தனை மாத்ரம் விடமாட்டேன். அவனுக்கு பத்தாயிரமாண்டு ஆயுள். அதில் எட்டாயிரம் முடிந்துவிட்டது. விரைவில் அவனுக்கு ஸாயுஜ்யமளிப்பேன், பின்னர் வேநன் என்ற அரசனுகி வேதமோதிய தர்மமனைத்தையும் வைசாக தர்மத்தையும் அழிப்பான். பின்னர் யான் ப்ருதுவாக அவதரித்து தர்மம் தழைத்தோங்கும்படிச் செய்கிறேன். தனது வேலையில் ஊக்கங்கொண்ட யமனைநாடி இனி அவனியிலுள்ளோர் அர்க்யம் தாநம் முதலியவைகளைச்செய்யட்டும். அதை விட்டு மற்ற தர்மத்தைச் செய்வோரது பூர்ண பல

னும் யமனையே சாறுமென்றுகூறி அவர்களை அனுப்பினூர். அன்று முதல் யமனை நாடி பூர்ணிமையில் அன்னதானம் தீர்த்த தானம் செய்யப்படுகிறது. வேநன் இவைகளை நிறுத்திய பின் பலரில் ஒருவரே தர்ம ஸூக்ஷ்மத்தை உணர்ந்து வைசாக மனுஷ்டிக்கின்றனர்.

வைசாக ஸ்நாநத்திற்கு பகவதாராதனம் பகவத் கதா ச்ரவணம் தானம் என்பன அங்கங்களாம். கதா ச்ர வணத்தின் பெருமையை விளக்க ஓர் இதிஹாஸம் கூறு கிறேன் கேள்! கோதாவரியில் பிரும்மேச்வர க்ஷேத்திரத் திலே ஸத்ய நிஷ்டர் தபோநிஷ்டர் என இரு துர்வாஸ சிஷ்யரிருந்தனர். ஸத்ய நிஷ்டர் ஸதா பகவத் கதையிலீடு பட்டவர். கூறுபவர் கிடைத்தால் ஸகல கர்மாக்களையும் சுறுக்கிக்கொண்டு ச்ரவணம் செய்வர். இல்லையேல் தான் கதை கூறுவார். எங்கு ஸத்ஸங்கமும் ஸத்கதையுமில்லை யோ அது கங்காதீரமாயினும் அங்கு தங்கக்கூடாதென்ற சொல்லைக் கைகொண்டவர். தகாச்ரவணமில்லாதவர் கழுதையாகப் பிறப்பர் என்பதை நம்பியவர். தபோநிஷ் டர் கர்மநிஷ்டர். கர்மலோபம் வந்துவிடுமோ என்று கதையைப் பற்றியே கருதாதவர். தபோநிஷ்டர் இறந்த பின் சின்ன கர்ணன் என்ற பேயாக பிறந்தார். ஸத்ய நிஷ்டர் பைடீநஸீ எனும் நகரைநாடிச் செல்லும்பொழுது கானகத்தே காதிழந்த பேயாயுள்ள தன் ஸோதரனைக் கண்டார். அவனது பரிதாப நிலைக்கு வருந்தி தான் வைசாக புராண ச்ரவணம்செய்த புண்யத்தின் ஓர் முகூர்த்த புண்யத்தைத் தந்து அவனை வைகுண்டத்திற் கனுப்பினூர்.

வைசாகத்தில் ஜல தானம் செய்யாதவர் சரிதத்தைக் கேள்! பாஞ்சால நாட்டிலே பூரியசஸ் என்றோரரசனிருந் தான். அவனது கோசம் திடீரென குறைந்தது, ஸேனைகள் நோயால் சேதமாயின. துர்பிக்ஷமும் தோன்றிற்று. ஸம யம் பார்த்து சத்ருவும் அந்த ராஜ்யத்தைப் பிடுங்கிக் கொண்டான். சிதினீ எனும் மனைவியுடன் மன்னன் ஒரு வருமறியாமல் காட்டிற்குச் சென்றுன். அங்கு முப்பத்

தைந்து ஆண்டுகளைப்பல கஷ்டங்களுடன் சிந்தையிட்டுக் கழித்தான். தனது குருவை அக்காலத்தில் பலமுறை நினைக்க யாஜக உபயாஜகர் என்ற ஆசார்யர்கள் தற்செயலாக அங்கு வந்தனர். தனக்கு நேர்ந்த பெருந் துன்பத்திற்குக் காரணம் யாதென வேந்தன் வினவ, அவர்கள் ஞான திருஷ்டியால் அதை உணர்ந்து, முன்னம் நீ பத்து தலைமுறை வேடனாக இருந்தாய். 'பத்தாவது பிறவியில் நீ ஸஹ்யமலையில் ராக்ஷஸனைப்போல் கௌடதேச ஜனங்களைப் பீடித்து வந்தாய். அச்சமயம் த்யையில்லாததால் இச்சமயம் புத்ரனில்லாதவனாகவும் நம்பியவரைக்கெடுத்ததால் ஸஹோதரனற்றவனாகவும், ஹிம்ஸையால் நண்பனற்றவனாகவும் ஸாதுக்களை அவமதித்ததால் சத்ரு பயமுள்ளவனாகவும் தீர்த்தங்கூட தாநம் செய்யாததால் ஏழையாகவும் ஆனாய் என்றார்கள். இவ்வளவு பாபத்தினிடையே அரசனாகப் பிறக்க புண்யம் யாதோ என்று மன்னன் கேட்டான். காட்டில் இரு தனிக வைச்சர்யர்களும் கர்ஷணன் என்ற ஓர் வேதியனும் வெய்யிலில் வாடி ஓர் மரத்தின் கீழ் அமர்ந்தனர். நீ அவர்களை அடித்துப் பணத்தை பறிக்க ஆரம்பித்தாய். அவர்கள் ஓட, ஒரு வைச்யனைக் கொன்றுவிட்டாய். மற்றவர்கள் ஓட வைச்யன் தனத்தை ஓர் புதரில் எரிந்துவிட்டு தானும் பதுங்கிக்கொண்டான். அந்தணன் ஓடமுடியாமல் வழியில் விழுந்து மூர்ச்சை அடைந்தார். அவருக்கு ஜலமளித்து களை தெளிந்தெழுந்திருக்கும்படி செய்து தனமெங்கே? வைச்யனெங்கே என்றாய் அவர் உன்னிடம் பயந்து ஏதோ ஓரிடத்தைக் காட்டி ஓடிவிட்டார். உன் கார்யத்திற்காவாவது ஓர் உத்தமனுக்கு ஜலமளித்தாய். அது வைசாக மாதம். அப்புண்யத்தால் அரசனாகப் பிறந்தாய் இப்பொழுது வைசாக விருதம் செய், கோதாநத்தால் கோசமும் படுக்கையால் ஸுகமும்குடையால் ராஜ்யத்தையும் தண்ணீர் பந்தலால் மற்ற பாக்யங்களையும் பெறுவாய் என்று குரு கூறினார். அங்ஙனம் அரசன் அனுஷ்டிக்க பந்துக்களிவனைச் சூழ்ந்தனர். இவனது

நிலையை உணர்ந்த பகைவர்கள் பாஞ்சாலத்தை விட்டு பறந்தோடினர். முன்போல் மன்னன் ராஜ்யபாரம் செய்து வைசாக விருதத்தை நிஷ்காம்யமாகச் செய்தான். நாடு செழித்தது ஐந்து புதல்வர் பிறந்தனர் ஒரு நாள் அவனது தர்மத்திற்கு மகிழ்ந்த திருமால். சங்க சக்ரபீதாம்பர தாரியாக கருடவாஹனத்திலேறி லக்ஷ்மீதேவியுடன் காக்ஷியளித்தார். பார்த்திவன் பரமனது திருவடியிற் பணிந்து ஆநந்த பாஷ்பம் பெருகப் போற்றினன். யாது வரம் வேண்டுமென பகவான் கேட்க அசஞ்சலமான பக்தியையும் கண்கள் கண்ணனையே காணவும் காதுகள் அவன் கதையையே கேட்கவும் நாவு நாரணன் நாமத்தையே கூறவும் வரம் வேண்டினன், பகவானவை களைத் தந்து தான் தர்சநமளித்தது த்ருதீயை அன்று செய்யும் தான தர்மம் அக்ஷய்யமான பலனைத் தருவதால் அன்று முதல் அதை அக்ஷய த்ருதீயை என்றழைப்ப ரென்றும் கூறி மறைந்தார்.

வைசாக மஹிமையை விளக்க மற்றுமோர் சரிதம் கூறுகிறேன்! பம்பர தீரத்தில் சங்கன் என்றோர் வேதிய ரிருந்தார். அவர் தீர்த்த யாத்ரைக்குச் செல்லும்போது ஓர் வநத்தில் கோடை வெய்யிலில் வாகு ஓர் மரத்தடியே அமர்ந்தார். ஆங்கு ராக்ஷஸனைப்போல் ஓர் வேடன் வில்லு மம்புமாக அவர் முன் தோன்றி அவரது குடை செருப்புகளையும் ஆடை ஆபரணங்களையும் அபகரித்தான், அவர் வெய்யிலால் கொதிக்கும் மணலில் காலை வைக்க முடியாமல் புழுப்போல் துடிப்பதைக்கண்ட வேடன் மனமும் இறங்கிற்று. தனக்குப் பயன்படாத கிழிந்த செருப்புக்களை அவருக்குக் கொடுத்தான். அவர் பரம ஸந்தோஷங் கொண்டு வைசாக மாதத்தில் அவன் செய்த தாநத்திற்கு பகவான் பரமப்ரீதியுடன் ஆசீர்வதிப்பார் என்றார். பாதுகா தாந புண்யத்தால், பகவான் யார்? எது தர்மம்? தர்மத்தினல் வரும் பயன் யாது? என கேட்கவேண்டுமென அவர் அவனுக்கு உதித்தது. அவர் வைசாக மஹிமையைக் கூறிவரும்போது ஓர் யானையும்

சிங்கமும் சண்டையிட்டுக் களைத்து இவர்களருகே பூமியில் வந்து வீழ்ந்தன. சங்கர் கூறிய சில சொற்கள் அவைகள் காதில் விழ உடனே அவ்வுடலைவிட்டு திவ்ய சரீரம் பெற்று முனிவரைப் போற்றி விடைகேட்டார்கள். சங்கர் நீங்கள் யார்? ஏன் மிருகமானீர்? என்று கேட்க அவர்கள் நாங்கள் மதங்கமுனிவரவது தந்தில, கோஹலர் என்று பெயருள்ள புதல்வர்கள். தந்தை வைசாக விருதத்தை அனுஷ்டிக்கும்படி கூற அதைச்செய்யாது அவரையும் அலக்ஷ்யம் செய்தோம். அதனுல் விலங்கானேம். புராண ச்ரவணத்தால் நற்கதி பெற்ருேமென்று கூறி தந்தையிடஞ் சென்றனர்.

இதைக் கண்டவுடன் வேடனுக்கு ஆச்சரியமும் தர்மத்தில் ஆசையும் சங்கனிடம் அன்புமுண்டாயிற்று. வில்லையுமம்பையும் முறித்தெறிந்தான். தனது க்ரூர செயல்களை நினைத்து வருந்தி இவருக்குச்செய்த தீங்கை எண்ணி வெட்கித்து நின்ருன். தனது குற்றத்தை மன்னித்து சீடனுக ஏற்று தர்மோபதேசஞ் செய்யும்படி வேண்டினுன். சங்கர் ஜலாசயத்தைக் காட்டும்படி கூற அங்கு அழைத்துச்சென்று இனிய கனிகளையு மவருக்களித்தான். அவர் நீராடி ஆந்ஹிகத்தை முடித்து கனியுண்டு களைதீர்ந்து மரத்தடியே அமர்ந்து யாது கூறவேண்டுமென்ருர். முதலில் தான் வேடனுயிருப்பதற்குக் காரணம் யாதென்ருன். ஞாநக்கண்ணுல் உணர்ந்து முனிவர் சொன்னுர். சாகல நகரில் நீ ஸ்ரீவத்ஸகோத்ரத்தில் ஸ்தம்பன் என்ற வேதியனுயிருந்தாய். காந்திமதி என்ற அழகுள்ள மனைவியிருந்தும் வேசியிடம் ஆசை கொண்டாய். உத்தம பதிவ்ரதையான உன்மனைவி உனக்கும் உனது தாஸிக்கும் பணிவிடை செய்துவந்தாள். சிலகாலம் சென்றபின் உனக்குக் கொடிய நோய் உண்டாயிற்று. பொருளைக் கறந்துகொண்டு தாஸி உன்னைக் கைவிட்டாள். தன்னை நீ மதிக்காதபோதும் உனக்காபத்து வந்த காலத்திலும் ஒரே மாதிரியாக பணிவிடை புரியும் பத்நியின் செயல் உன்னை வெட்கி அவளிடம் மன்னிப்பு கேட்

கும்படி செய்தது. அவள் தனது வினையின்படி பயனுண்டாகிறதென்று கூறி இரவும் பகலும் உண்ணுது உறங்காது உனக்குப் பணிவிடை செய்தாள். பல தைவங்களைப் பிரார்த்தித்தாள். ஒரு நாள் வைசாக வெய்யிலில் வாடி வதங்கி தேவலர் எனும் முனிவர் உனது வீட்டிற்கு வந்தார். அவரை வரவேற்று நீரும் நிழலுமேனும் அளித்து உபசரிப்பது தர்மமென உன் மனைவி உணர்ந்தாள். ஆனுல் உனக்கிஷ்டமில்லாததைச் செய்யவும் மநமில்லை முனிவர் நிலையோ கேவலமாக இருந்தது. ஆபத்திற்கு தோஷமில்லை என்று உன்னிடம், அவர் ஓர் வைத்யர் என்றுகூறி அவருக்கு வேண்டிய உபசாரம் செய்தனுப்பினுள். மறுநாள் உனக்கு மரணம் நேர்ந்தது. அவள் உன்னைச் சிதைலியிட்டு அநுமரணம் செய்தாள். உணவூட்டிய உன் மனைவியின் விரலை மரண காலத்தில் ஜ்வரவெறியால் கடித்தாய். அது உன் வாயிலே செல்ல பற்கள் மூடிக்கொண்டன. இத்தகைய பாபங்களால் வேடனுக பிறந்தாய். இறக்கும் காலத்தில் இஷ்டமில்லாமலே ஓர் வேதியனுக்கு நீர் நிழலளித்த ஸுக்ருதத்தால் தர்மபுத்தி தோன்றிற்று உனக்கு என்று சங்கர்கூற, வேடன் பகவானது ஸ்வரூபத்தைக் கூறவேண்டுமென்ருன்.

பரமாத்மா வேத வேதாந்தங்களால் அறியத்தக்கவர். பூதங்கள் மானிடர் தேவர் ஸப்தரிஷிகள் அக்கி சூர்யன் குரு இந்திரன் உமை சிவன் புத்தி இவை ஒன்றைவிட மற்ெருன்று நூறு மடங்கு மேலானவை. எல்லாவற்றையும் விட பிராணனே மேலானது. அதற்கு மேல்பட்ட பொருளே இல்லை. பரமாத்மா உலகைப்படைத்து அதற்கு ஸம்ராட்டாக பிரும்மாவிற்கு அபிஷேகஞ்செய்து இளவரசாக வரக்கூடியவர் யார் என்று தேவர்களையே கேட்டார். பலர் பலவகையாகக்கூறி பரமனையே கூறும்படி வேண்டினர். அவர் ஓர் உடலைக்காட்டி இதிலிருந்து எவர் வெளி கிளம்பினுல் இவ்வுடல் அழியுமோ அவரே உயர்ந்தவர் என்ருர். காலிலிருந்து ஜயந்தன் கிளம்பினுன். நொண்டியாயிருந்தானே தவிற இறக்கவில்லை.

குஹ்யத்திலிருந்து தக்ஷர் கிளம்ப நபும்ஸகனுனன். இந்திரன் கையிலிருந்து கிளம்ப கைநொண்டியானுன். சூர்யன் கிளம்ப குருடானுன். திக்குகள் கிளம்ப செவிடானுன். அக்நி கிளம்ப ஊமையானுன். ருத்ரன் கிளம்ப மநமில்லாஜடனுனன். இங்ஙனம் எவர் கிளம்பியும் உடலுக்கபாயமில்லை. ஆனுல் பிராணன் கிளம்பும்போது எல்லோரும் மிகத்துன்புற்று நீயே உயர்ந்தவன்! கிளம்பாதே என்று வேண்டினர். ஆதலின் பிராணனே சிறந்தது. அதே வாஸுதேவனெனப்படுவது. அந்த பிராணனை ஏன் எல்லோரும் பிரகாசமாக பூஜிக்க வில்லை எனில், அது ஓர் வேள்விசெய்ய பூமியை உழுதது. அங்கு தவம் செய்து கொண்டிருந்த கண்வமுநிவர் சினங்கொண்டு உள்ளே மறைவாக இருந்த தன்னை வெளிப்படுத்தியதால் நீ பிரஸித்தி பெருமல் போவாய் என்று சபித்தார். பிராணனும் அவரை நீ குருதுரோஹியாவாய் என சபித்தது. ஆதலால் பிராணனுக்கு பரமாத்மா தேவதையாயிருந்தும் அது பிரஸித்தமாகவில்லை. கண் வரும் குருவிடம் கற்றதை கக்கி மறுபடி சூர்யனிடம் வித்யாப்யாஸம் செய்தார். இப்படி சங்கர் கூறிவர அவரருகிலிருந்த வடவிருக்ஷம் திடீரென முறிந்துவிழ அதிலிருந்து ஓர் திவ்யபுருஷன் கிளம்பினுன். சங்கர் அவரை நீயாரென்று வினவ, பிரயாகையில் ரோசனன் என்ற அந்தணன் நான். ஜயந்தரெனும் பெரியார் வைசாக புராணம்படித்தார். அங்கு யான் தலைப்பாகையுடன் தாம்பூலதாரியாக அவருக்கு நமஸ்காரமும் செய்யாமல் உட்கார்ந்து கதை முடியும் வரை வம்பு பேசினேன். ஆதலின் இறந்தபின் பல நரகங்களை அனுபவித்து இங்கு பாம்பாக பிறந்து உணவின்றி வருந்தினேன். நீர் கூறிய கதையைக்கேட்டு நற்கதி பெற்றேனென்று கூறி வணங்கிநிற்க சங்கன் அவரைத் தழுவி நீ தாசார்ண தேசத்தில் வேதசர்மா என்னும் வேதியனுகப் பிறந்து பூர்வ க்ஞானத்துடன் வைசாக தர்மத்தைச்செய்து வைகுண்டம் செல்வாயென்றுர்.

வேடன் தனது முன்னே பலர் நன்மை பெற்றதைக் கண்டு வியந்து தனக்கும் அருள் புரியும்படி வேண்ட, சங்கர் ஸ்ரீ ராம மந்திரத்தை உபதேசித்து, க்ருணி எனும் முனிவர் கண்மூடி தவம் செய்வார். அவர் மேல் புத்து தோன்றும், ஆதலின் அவர் வால்மிகி எனப்படுவர். அவரது வீர்யம் அவர் த்யானம் செய்யும்போது கிளம்பும். அதை ஒரு வேட ஸ்திரீ புஜிப்பாள். அவளிடம் நீ வால்மிகி என்ற பெயருடன் வெளிவந்து ஸ்ரீ ராமாயண கதை எழுதுவாய் என்று வேடனை அனுப்பி தானும் சென்றார் என்றுகூறி ச்ருத தேவர் மேலும் வைசாகத்தை வர்ணிக்கிறார்.

ஆநர்த்த தேசத்திய தர்மவர்மன் என்ற அந்தணர் எங்கும் கலியினால் தர்மமழிவதைக் கண்டு வருந்தி குரு க்ஷேத்ரஞ்சென்றார். அங்கு ரிஷிகள் க்ருதம் முதலிய யுகங்களில் பல்லாண்டு செய்வதைக் கலியில் சிலநாட் களில் செய்து ஸித்திபெறக் கூடுமாதலால் கலி சிறந்த யுகமென்றனர். நாரதர் ஓர் கையால் நாக்கையும் மற்றோர் கரத்தால் ஆண்குறியையும் பிடித்துக்கொண்டு ஆடினார். இவவிரண்டையும் ஜயித்தவருக்கே கலி நல்ல தென்பது அதன் பொருள், கலியில் நடக்கும் தர்ம விருத்தமான செயல்களைக்கண்டு மநம் நொந்து தர்ம வர்மா பித்ரு லோகஞ்சென்றார். அங்கு தலைகீழாக பாழுங் கிணற்றுக்கு மேலே ஒரே புல்லினால் விழாமல் தொங்கும் தனது பித்ருக்களைக் கண்டார். அந்த ஓர் புல்லே தான் என்றும், அதை ஆயுள் எனும் எலி அறுப்பதையும், தனக்குப்பின் ஸந்ததி இல்லாததால் அவர்கள் நகரத்தில் வீழ்வதையுங் கண்டு கலியில் அதர்மம் அதிகமாக பரவு வதால் எப்படி ஸந்ததியை விருத்தி செய்வதென்று அவர்களையே கேட்டான். பித்ருக்கள், விஷ்ணு கதை கேட்போர், ஸதாசாரசீலர், எவரிடம் ஸாளக்ரமம் இருக் கிறதோ எதரிடம் பாரதமுளதோ வைசாக ஸ்நாநம் வைச்வதேவம் கார்த்திகதீபம், துளஸீ ரக்ஷணை இவைகளை எவர் செய்கிறார்களோ அவர்களைக் கலி அண்டுவதில்லை

என்று கூறிய தர்மங்களைச்செய்து தர்மவர்மா ஸந்ததியை விருத்திசெய்து அவர்களைக் காப்பாற்றினுன்.

ஓர் ஸமயம் இந்திரன் பலியுடன் போர் புரிந்து அவனைப்பாதாளத்தில் துரத்திவிட்டு பூலோகம் வந்தார். உசத்யரது ஆச்ரமத்தில் ரதிபோன்ற முனிவர் மனைவி படுத்திருக்க அடக்கமுடியாத காம வெறியால் அவளைப் பலாத்காரம் செய்தார். ஏற்கனவே கருவிலிருந்த முனி குமரன் பாதத்தினுல் இந்திரன் இச்சை கைகூடாமல் தடுத்துவிட்டார். அதனுலவரைப் பிறவி குருடனுகும் படி சபித்து முனிவரிடம் பயந்து மேருமலையின் குஹையில் பதுங்கி இருந்தார், இதை அறிந்த அஸுரர் அமராவதி யில் புகுந்து அமரரை ஹிம்ஸித்தனர். பிருஹஸ்பதி தேவ ருடன் மேரு குஹைக்குவந்து சக்ரனை வெளியில்வரும்படி அழைத்தார். தேவேந்திரனே பலத்தையும் தேஜஸையு மிழந்து வஜ்ரத்தையும் தூக்க முடியாமல் லஜ்ஜையால் வாடிநின்ருன். பிருஹஸ்பதி வைசாக ஸ்நாந விருதங்களை உபதேசித்து அதன்மூலம் இழந்த சக்தியைப் பெறும்படி செய்து தேவ ராஜ்யத்தில் அவரை நிலைக்கச்செய்தார்.

வைசாக சுக்ல துவாதசி மிகப் புண்யமான காலம். அச்சமயம் செய்யும் தாந தர்மங்கள் அக்ஷய்யமான பலத்தை அளிக்கும். அதன் பெருமையை விளக்க ஓர் இதிஹாஸம் கூறுகிறேன். காச்மீர தேசத்தில் தேவ விருதன் என்ருேர் வேதியரிருந்தார். அவர் மாலினீ எனும் மகளை ஸத்யசீலனுக்களித்து மணம்செய்வித்தார். அவர் எல்லோருக்கும் நல்லவனுயிருந்தும் மாலினியின் மநதிற்கு மாத்ரம் பிடிக்காதவனு யிருந்தார். ஆதலினவள் துஷ்ட ஸ்திரீகளது ஸஹாயத்தால்யோகினீ எனும் ஒருவ ளிடமிருந்து தன் கணவன் தனக்கு வச்யனுகும்படி ஓர் ஔஷதத்தை வாங்கிப் பதிக்களித்தாள். அதனுல் அவர் க்ஷயரோகத்திற்காளாகி அவளைச் சரண் புகுந்து தன்னைக் காக்கும்படி வேண்டினுர், முன்போல் யோகினியிடம் சென்று மாற்று மருந்து வாங்கித்தந்தாள். கணவன் படுக்கையிலிருக்கும்பொழுது இவள் துஸ்ஸஹவாஸத்

தால் கற்பையிழந்தாள். குஷ்டரோகத்தினுல் பீடிக்கப் பட்டிறந்தாள். பல்லாண்டுகள் இப்பாபத்தினுல் தாம்ப்ர பாஜந நரகத்திலிடர்பட்டு நூறு பிறவி சொறி நாயாகப் பிறந்தாள். ஸெளவீர தேசத்தில் பத்மபந்து எனும் அந்தணர் வீட்டுவாயிலில் அவர் புத்ரர் கால்கழுவிய ஜலத் திலே இந்நாய் வீழ்ந்து புரண்டது. உடனே அதற்கு பூர்வ க்ஞாநம்வர, தன் பாபத்தை அகற்றி தன்னைக் காத் தருளும்படி வேண்டிற்று. முனிகுமாரர் அதுதான் பாபத் தை அனுபவிக்கட்டுமென்று உதவி செய்யாதிருந்தார். அவர் தந்தை பரோபகாரம் மிகச்சிறந்த தருமமென்று தான் செய்த வைசாச த்வாதசீ விருத புண்யத்தை அதற் களித்தார். அதனுல் அது திவ்ய தேஹம்பெற்று அப்ஸர ஸாயிற்று. மறுபிறப்பில் ஊர்வசியாயிற்று.

வைசாக விருதத்தை அம்மாதம் பூர்ணமாக அனுஷ் டிக்க இயலாதவர் அமிருதந்தோன்றிய அம்மாத ஏகாதசி, அதைப் பகவான் காத்த தினமான த்வாதசி, அமரர் அமிருதமுண்டத்ரயோதசி, பூர்ணிமை ஆகிய இந்த திதி களிலேனும் ஸ்நாந தாந பகவதாராதன பகவத் கதாச்ர வணங்களை செய்யவேண்டும். அல்லது அதிலும் அசக் தர் கடைசி மூன்று திதிகளிலேனும் செய்ய வேண்டும். பூர்ணிமையில் அன்னமளித்தால் ஸந்ததி விருத்தியாகும். அச்சமயம் ஸ்ரீ பாகவதத்தைக் கேட்கவேண்டும். வைசாக புராணத்தைக் கேட்டலும் படித்தலும் சிறந்த தர்மம். வ்ருஷோத்ஸர்க்கம் கோதாநம் இவைகளுக்கு மிக உத்தம மான காலமிது. ஸகல புண்ய தீர்த்தங்களும் பகவானைப் பாபிகள் தங்களிடமளித்த பாபத்தை நீக்க வழி கூறும் படி வேண்டினர். அவர் வைசாகத்தில் கடைசி மூன்று நாளேனும் முழுகாதவரிடம் போகும்படி செய்தார். சுலபமாக வெய்யில் காலத்தில் சரீரத்திற்கு அனுகூல மான வைசாக ஸ்நாநத்தைச்செய்து இஹபரஸுகம்பெறு இதன் பெருமை நூருண்டு சிவனுல் சிவைச்குக் கூறப் பட்டதென்று நாரதர் கூறி முடித்தார். அம்பரீஷன் இவ்வுத்தம கதைகூறிய தேவ ரிஷியைத் தேவோபசாரம்

செய்து அனுப்பினுன். இதைபடிப்பதால் ஸகல ச்ரேய ஸ்ஸுமுண்டாகும்

வைசாக மாகாத்ம்யம் ஸம்பூர்ணம்.

சுபம்.

---

தாரித்ர்ய ஹரண தேவீஸ்துதி—காலை மாலைகளில் மும் முறை நியமத்துடன் ஜபித்தால் ஏழ்மை அகலும்.

1. யதுத்பவா : ஸத்வ ரஜஸ் தமோகுணு :!
ஸர்க்க ஸ்திதி த்வம்ஸ நிதாந காரிண :!
யதிச்சயா விஸ்வமிதம் பவாபவெள !
தநோதி மூலப்ரகிருதிம் நதாஸ் மதாம் !!

2. யாஹித்ரயோ விம்ஸதி பேதசப்திதா !
ஜகத்யசேஷே ஸமதிஷ்டிதா பரா !
யத்ரூப கர்மாணி ஜடாஸ்த்ர யோபி !
தேவா நவித்யு : ப்ரகிருதிம் நதாஸ் மதாம் !!
தேவா நவித்யு : ப்ரகிருதிம் நதாஸ் மதாம் !!

3. யத்பக்தி யுக்தா : புருஷாஸ்து நித்யம் !
தாரித்ர்ய பீமோஹ பரா பவாதீன், !!
நப்ராப்நுவந்த்யேவஹி பக்தவத்ஸலாம் !
ஸதைவ மூலப்ரகிருதிம் நதாஸ்மதாம் !!

---

## ஸங்கடஹரண ஹரி ஸ்துதி

காலை மாலைகளில் மூன்று முறை ஜபித்தால் ஸகல ஸங்கடங்களும் நீங்கும்.

1. நாமோ மத்ஸ்ய கூர்மாதி நாநாஸ்வரூபை:
ஸதா பக்த கார்யோத்யதா யார்த்ரி ஹந்த்ரே
விதாத்ராதி ஸ்ர்க்கஸ்திதி த்வம்ஸ கர்த்ரே
கதா சங்க பத்மாரி ஹஸ்தாய தேஸ்து

2. ரமாவல்ல பாயாஸுராணும் நிகந்த்ரே
புஜங்காரி யாநாய பீதாம்பராய
மகாதி கிரியா பாக கர்த்ரே விகர்த்ரே
சரண்யாய தஸ்மை நதாஸ்மோ நதாஸ்ம:

3. நமோ தைத்ய ஸந்தாபி தாமார்த்ய துக்க
அசலத்வம்ஸ தம்போளயே விஷ்ணவேதே
புஜங்கேஸ தல்பேஸ யாயார்க்க சந்த்ர
த்விநேத்ராய தஸ்மை நதாஸ்மோ நதாஸ்ம:

---

### வைஸாக ஸ்ஞன ஸங்கல்பம்

மதுசூதன தேவஸ வைஸாகே மேஷகே ரவௌ!
ப்ராதஸ்ஞனம் கரிஷ்யாமி நிர்விக்னம் குருமாதவ!!

### அர்க்ய ப்ரதானம்

வைஸாகே மேஷகே பானௌ ப்ராதஸ்ஞன பராயண:
அர்க்யம் தே (அ)ஹம் ப்ரதாஸ்யாமி க்ருஹாண
மதுஸூதன!!

Sree Krishna Printers, Madras-1.